**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025.08.06 ஆம் திகதி நடைபெற்ற விசேட சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் விசேட சபைக் கூட்டம் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதி நன்பகல் 12.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

02. கௌரவ பிரதேச சபை உப தலைவர் - திரு. என்.ஜீ. நலின் சேனக மாகம்மன
03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர
06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டப்ளிவ். நிர்மிக தீபால் அபேவர்தன
07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. மயூரி சத்துரிக்கா பரணமான்ன
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி
19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. இராஜேந்திரன் திரிசோக்
20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக்க குமார
21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். தனேஸ் குமரன்
23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். மொஹான் மஞ்சுல
24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச்.ஜீ. சச்சினி செவ்வந்தி
27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால்
29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன
30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.பீ. ஜகத் சேனாரத்தின
32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
33. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
34. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
35. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
36. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு டப். கிஷேன் மோகன்.

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1. கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்

01. 2025 ஆம் ஆண்டிற்கு உரித்தான பிரதேச சபைக் கூட்டத்திற்கான தினத்தை முடிவு செய்தல்.

2025 ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் வாரத்தின் புதன் கிழமை பிரதேச சபைக் கூட்டம் கூடுவதற்கும் ஆகஸ்ட் மாதம் மட்டும் 20 ஆம் திகதி பிரதேச சபைக் கூட்டம் கூடுவதற்கு பிரேரணை முன்வைக்கப்பட்டது.

பிரதேச சபைக் கூட்டமானது காலைப் பொழுதில் நடாத்துவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. சுகத் சாந்த அமரசேகர அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

CamScanner

முடிவுகள் இலக்கம் 01.

01. 2025 ஆம் ஆண்டிற்காக ஒவ்வொரு மாதத்தின் இரண்டாம் வாரத்தின் புதன் கிழமை பிரதேச சபைக் கூட்டம் கூடுவதற்கும் ஆகஸ்ட் மாதம் மட்டும் 20 ஆம் திகதி பிரதேச சபைக் கூட்டம் கூடுவதற்கு, பிரதேச சபைக் கூட்டமானது காலைப் பொழுதில் நடாத்துவது உகந்தது என்ற பிரேரணை ஏகமனதாக பொதுக பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

02. மின்னஞ்சல், Whatsapp மூலம் சபைக்கு உரித்தான நிகழ்ச்சி நிரல் மற்றும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பிரேரணை மற்றும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் தெரிவித்தது, மின்னஞ்சல், Whatsapp மூலம் சபைக்கு உரித்தான நிகழ்ச்சி நிரல் மற்றும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பிரேரணையை ஆமோதிப்பதுடன், மேலும் இலத்திரணியல் ஊடகங்களின் பயன்பாடு மிகவும் குறைவு என்பதால் ஒரு வருட காலத்திற்கு மின்னஞ்சல், Whatsapp பயன்படுத்தி அனுப்புவதுடன் தபால் மூலமும் நிகழ்ச்சி நிரல் மற்றும் அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்துமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் தெரிவித்தது, பிரதேச சபையில் தமிழ் உறுப்பினர்கள் இருப்பதன் காரணத்தினால் அவர்களின் இலகிற்கு சபை கூட்ட அறிக்கைகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் தமிழ் மொழியில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டு வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட பிரேரணைகள் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களால் ஆமோதிக்கப்பட்டன.

முடிவுகள் இலக்கம் 02

மின்னஞ்சல், Whatsapp பயன்படுத்துவதுடன் நிகழ்ச்சி நிரல் மற்றும் சபை கூட்ட அறிக்கைகள் தபால் மூலம் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்தல் தொடர்பான பிரேரணை மற்றும் மொழிப்பெயர்ப்பாளர் உத்தியோகத்தர் ஒருவருடைய சேவையை பெற்றுக்கொள்வதற்கும், அதற்கான கொடுப்பனவுகளை வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

03. 2025 ஆம் ஆண்டிற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களை நியமித்தல் மற்றும் குழுக்களுக்கான உறுப்பினர் எண்ணிக்கையை தீர்மாணித்து உறுப்பினர்களை தெரிவு செய்தல்.

1987 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களை நியமிப்பது உகந்தது என்று பரிந்துரைக்கின்றேன்.

1. நிதி மற்றும் கொள்கை குழு
2. தொழிநுட்ப சேவைகள் குழு
3. வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு
4. சூழல் மற்றும் பொது வசதிகள் குழு
5. ஆலோசணைக் குழு

**1. நிதி மற்றும் கொள்கை குழு**

பெல்மதுள்ள பிரதேச சபையின் நிதி மற்றும் கொள்கை குழு என்ற பெயரில் குழு ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் பிரதேச சபைக்கு உரிய நிதிகள் மற்றும் தொடர்பான வருமானங்கள், செலவுகள் மற்றும் கொள்வனவுகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக பிரதேச சபை கூட்டத்தில் காலத்திற்கு காலம் வழங்கப்படும் அதிகாரங்களை செயல்படுத்துவதல் இக் குழுவின் செயல்களாக இருக்க வேண்டும் என்றும் இக் குழுவானது 12 உறுப்பினர்களை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும் என்றும் இக் கூட்டத்திற்கு பரிந்துரைக்கின்றேன்.

**2. தொழிநுட்ப சேவைகள் குழு**

பெல்மதுள்ள பிரதேச சபையின் தொழிநுட்ப சேவைகள் குழு என்ற பெயரில் குழு ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் பிரதேச சபைக்கு உரிய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பௌதீக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டுமான வசதிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக பிரதேச சபை கூட்டத்தில் காலத்திற்கு காலம் வழங்கப்படும் அதிகாரங்களை செயல்படுத்துவதல் இக் குழுவின் செயல்களாக இருக்க வேண்டும் என்றும் இக் குழுவானது 12 பிரதேச சபை உறுப்பினர்களையும், 02 வெளி உறுப்பினர்களை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும் என்றும் இக் கூட்டத்திற்கு பரிந்துரைக்கின்றேன்.

**3. வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு**

பெல்மதுள்ள பிரதேச சபையின் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு என்ற பெயரில் குழு ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் பிரதேச சபைக்கு உரிய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக பிரதேச சபை கூட்டத்தில் காலத்திற்கு காலம் வழங்கப்படும் அதிகாரங்களை செயல்படுத்துவதல் இக் குழுவின் செயல்களாக இருக்க வேண்டும் என்றும் இக் குழுவானது 12 பிரதேச சபை உறுப்பினர்களையும், 02 வெளி உறுப்பினர்களை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும் என்றும் இக் கூட்டத்திற்கு பரிந்துரைக்கின்றேன்.

**4. சூழல் மற்றும் பொது வசதிகள் குழு**

பெல்மதுள்ள பிரதேச சபையின் சூழல் மற்றும் பொது வசதிகள் குழு என்ற பெயரில் குழு ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் பிரதேச சபைக்கு உரிய கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பொதுமக்களின் சுகாதார பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் கழிவு முகாமை நடவடிக்கைகள் தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்திற்கு பரிந்துரைகள் வழங்குதல் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக பிரதேச சபை கூட்டத்தில் காலத்திற்கு காலம் வழங்கப்படும் அதிகாரங்களை செயல்படுத்துவதல் இக் குழுவின் செயல்களாக இருக்க வேண்டும் என்றும் இக் குழுவானது 12 பிரதேச சபை உறுப்பினர்களையும், 02 வெளி உறுப்பினர்களை கொண்டதாகவும் இருத்தல் வேண்டும் என்றும் இக் கூட்டத்திற்கு பரிந்துரைக்கின்றேன்.

**5. ஆலோசணைக் குழு**

பேல்மதுள்ள பிரதேச சபையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விசேட விடயங்கள் தொடர்பாக ஆலோசணைகள் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசணைக் குழு ஒன்று நியமித்துக் கொள்வது உகந்தது என்று இக் கூட்டத்திற்கு பரிந்துரைக்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட பிரேரணைகள் அனைத்தும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார அவர்களால் ஆமோதிக்கப்பட்டன.

**முடிவுகள் இலக்கம் 03**

அதன் அடிப்படையில் 1987 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான நிதி மற்றும் கொள்கை குழுவிற்கு 12 பிரதேச சபை உறுப்பினர்களும், தொழிநுட்ப சேவைகள் குழுவிற்கு 12 பிரதேச சபை உறுப்பினர்களும் 02 வெளி உறுப்பினர்களும் , வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவிற்கு 12 பிரதேச சபை உறுப்பினர்களும் 02 வெளி உறுப்பினர்களும், சூழல் மற்றும் பொது வசதிகள் குழுவிற்கு 12 பிரதேச சபை உறுப்பினர்களும் 02 வெளி உறுப்பினர்களும், ஆலோசணைக் குழுவிற்கு 14 பிரதேச சபை உறுப்பினர்களும் கொண்ட குழுக்கள் நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக பிரதேச சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

CamScanner

04. கொரவ பிரதேச சபை உறுப்பினர்களின் கருத்து தெரிவித்தல்கள் ,

பெல்மதுள்ள பிரதேச சபைக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள கௌரவ உப தலைவர் மற்றும் 35 பிரதேச சபை உறுப்பினர்களும் புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள கௌரவ தலைவர் அவர்களுக்கும் மற்றும் உப தலைவர் அவர்களுக்கும் மற்றும் சக பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். அத்துடன் பிரதேச சபையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தமக்கு சந்தர்ப்பம் வழங்கிய பெல்மதுள்ள பிரிவில் வாழும் பொது மக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். (சிங்கள மொழி மூலம் மற்றும் தமிழ் மொழி மூலம்) இன மத கட்சி வேறுபாடுகள் இன்றி பெல்மதுள்ள பிரதேசத்தில் வாழும் பொது மக்களின் நல்வாழ்விற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கும், பெல்மதுள்ள பிரதேச சபைக்கு புதிதாக வருமானம் ஈட்டக்கூடிய திட்டங்களை இணங்காண்பதற்கும் , கட்சி வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றினைந்து பெல்மதுள்ள பிரதேச சபையை அபிவிருத்தி செய்வதற்கும், வேறு நாடுகளிடம் இருந்து உதவிகளைப் பெற்று பெல்மதுள்ள பிரதேச சபையை அபிவிருத்தி செய்வதற்கும், தோட்டப்புற வாழ் மக்கள் பற்றி கூடுதலான அவதானம் செலுத்துவதற்கும், பொது மக்களுக்கு சேவை செய்யும் பிரதேச சபை உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பாதுகாப்பதற்கும், எஞ்சிய 04 வருட காலத்திற்கு பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டு பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது இவ் பிரதேச சபை உறுப்பினர்களின் குறிக்கோல் என்றும் கூறினர்.

**வேறு விடயங்கள்**

- **லீவுகளுக்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ளல்.**

தனது தாயின் மறைவு காரணமாக பிரதேச சபை கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாது என்று தெரிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்களுக்கு லீவு அனுமதிக்கப்படுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் ஆமோதித்தார்.

**சபைக் கூட்டத்தை தெளிவுபடுத்தும் அறிக்கைகள் மற்றும் கருத்துக் கூறல்கள்**

உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் CLG/AC/04/05/11 இலக்கமுடைய 2025.08.06 ஆம் திகதியுமுடைய கடிதத்திற்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களில் அடிப்படை சட்டங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சியானது 2025.08.16 ஆம் திகதி மு.ப. 08.30 இலிருந்து பி.ப. 04.30 வரை புஸ்செல்ல பயிற்சி நிலையத்தில் நடாத்துவதற்கு உள்ளதால் அதற்காக அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறும் , பிரயான இலகுவிற்கும் கேள்வி மனுக்களை கோரி வாடகை அடிப்படையில் பஸ் ஒன்றின் சேவையை பெற்றுக்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை தலைவர் தெரிவித்தார்.

- **பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை**

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 02.00 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பெல்மதுள்ள பிரதேச சபை

CamScanner